உடல் உறுப்பு தான அறுவை சிகிச்சை

# 5 பேருக்கு வாழ்வு தந்த விவசாயி

## ● வேலம்மாள் மருத்துவமனை சாதனை



▲ உடல் உறுப்பு தான அறுவை சிகிச்சையை மேற்கொண்ட வேலம்மாள் மருத்துவமனை மருத்துவக் குழுவினர்.

■ மதுரை

மூளைச்சாவு அடைந்த விவசாயி ஒருவரின் உடல் உறுப்புகளை பெற்று வேலம்மாள் மருத்துவமனையின் முதல் பல்லுறுப்பு தான அறுவை சிகிச்சை மூலம் 5 பேர் வாழ்வு பெற்றுள்ளதாக வேலம்மாள் கல்விக் குழும தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் கூறினார்.

ராமநாதபுரம் மேலக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி ராமசாமி(68). இவர் கடந்த ஜன.21-ம் தேதி விபத்தில் காயமடைந்தார். உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ராமசாமி, மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். மருத்துவர்கள் ஆய்வில் ராமசாமி மூளைச்சாவு அடைந்தது தெரிந்தது. அவரது உடல் உறுப்புகளை தானம் வழங்க உறவினர்கள் சம்மதித்தனர். இதன்படி, நேற்று அவரது கண்கள், சிறுநீரகங்கள், கல்லீரல் ஆகியவற்றை வேலம்மாள் மருத்துவமனை உடல் உறுப்பு மாற்றுத்துறை மருத்துவ நிபுணர்களும், மூத்த மருத்துவர்களும் பாதுகாப்பாக அகற்றினர். இந்த உறுப்புகள் அனைத்தும் 5 நோயாளிகளுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டன.

வேலம்மாள் கல்வி குழுமத் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் கூறுகையில், "விவசாயி ராமசாமி தனது உறுப்புகளின் தானம் மூலம் 5 பேருக்கு வாழ்வு தந்துள்ளார். வேலம்மாள் மருத்துவமனையில் நடைபெறும் முதல் பல்லுறுப்பு தான அறுவை சிகிச்சை இதுவாகும். உடல் உறுப்புகள் தானம் வழங்குவது தொடர்பாக விழிப் புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் பலரின் வாழ்வுக்கு வழி காணலாம். வேலம்மாள் மருத்துவமனை இதில் முழு கவனம் செலுத்தும்" என்றார்.